# அ.தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் கூட்டு முறிந்தது!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 27 இதழ் 28
யாழ்ப்பாணம் புதன்கிழமை 10 03 — 1993

(புதுடில்லி)

அ. தி.மு.க இந்திரா காங்கிரஸ் இடையே கடந்த இருபது வருடங்களாக இருந்து வந்த கூட்டு முறிவடைந்ததாக தெரியவந்துள்ளது.

தமிழகமுதல்வரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான செல்வி ஜெயலலிதா நேற்றிரவு வெளியிட்ட அறிக்கை ஒன்றின்படி. இது தெரியவந்துள்ளது,

மேற்படி இருகட்சிகளுக்கு மிடையில் கடந்த சில மாதங்களாக கருத்து மோதல்கள் இருந்து வந்தது தெரிந்ததே.

இரு கட்சிகளுக்கு மிடையிலான கூட்டு முறிந்துவிடும் வகையில் கருத்து வேற்றுமைகள் நிலவிவந்தன.

இந்திரா காங்கிரஸ் கட்சி, அ. தி. மு. க மீது பலவித குற்றச்சாட்டுக்களை அண்மைக் காலமாகச் சுமத்தி வந்தது.

இந்த விவகாரம் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் வரை சென்றது.

[4ம் பக்கம் பார்க்க]

## கல்முனைக் கடலிலிருந்து பீரங்கித் தாக்கு

(யாழ்ப்பாணம்)

கல்முனைக் கடல் பகுதியில் நேற்று காலை கடற்படைப் பீரங்கிப் படகு ஒன்று தரை தட்டியதனால் மற்றொரு பீரங்கிப் படகிலிருந்து கிழக்கு அரியாலைப் பகுதியை நோக்கிப் பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

[4-ம் பக்கம் பார்க்க]

# ★ ஐ. நா. கண்காணிப்பின் கீழ்

# பூநகரி ஊடாக உணவு வாகனம்

# வருவதற்கு புலிகள் இணக்கம்

## பயணிகள் போக்குவரத்துப் பற்றி அடுத்த கட்டப் பேச்சில் ஆராயப்படும்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐ. நா. உயர் ... பின் கீழ் சங்குப்பிட்டி - கேரதீவு பாதையூடாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிவரும் வாகனங்களை போக்குவரத்திற்கு அனுமதிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் அரசு தரப்பு இணங்கும் பட்சத்தில் ஸ்ரீலங்கா அரசுடனும், இராணுவத் தலைமைப் பீடத்துடனும் விரைவில் பேச்சுக்களை நடத்தவிருக்கிறது. இதற்கு அரசு சார்பற்ற நிறுவனங்கள் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றி வரும் தனியார் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் பூநகரிப் பாதையூடாகப் போக்குவரத்தை மேற்கொள்ளும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## முன்னேறிய இராணுவம் தாக்குதலின்றி திரும்பியது

(யாழ்ப்பாணம்)

... ருந்து நேற்றுக்காலை முன்னே ... றது. ... இராணுவம் சங்குப்பிட்டி

[4-ம் பக்கம் பார்க்க]

## மன்னார் பகுதியில் விமான குண்டுவீச்சு

(மன்னார்)

மன்னார் பெரியபண்டிவிரிச்சானில் நேற்றுமுன்தினம் மூன்று குண்டுவீச்சு விமானங்களும் ஒரு ஹெலிகொப்டரும் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி கடுமையான தாக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழ் அகதிகள் இருவர் சென்னையில் கைது

(சென்னை)

சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடிய இலங்கைத் தமிழ் அகதிகள் இருவர் சென்னை கோடம்பாக்கம் பகுதியில் நேற்றுமுன்தினம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இவர்களை நிற்கும்படி பொலிசார் சைகை செய்தும் கூட இவர்கள் நிற்காமல் சென்றதையடுத்து துரத்திச் சென்ற பொலிசார் இருவரையும் கைது செய்ததாக கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாடு

(கொழும்பு)

ஏழாவது சார்க் உச்சி மாநாடு அடுத்த மாதம் 10ம் 11ம் திகதிகளில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறவுள்ளது.

பலதடவைகள் ஒத்திவைக்கப்பட்ட இந்த சார்க் மாநாட்டை மேற்குறிப்பிட்ட திகதிகளில் வைப்பதற்கு ஏழு நாடுகளின் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ரி)

## வல்வை கடல் பகுதியில் மீனவர் மீது கடற்படை தாக்கு

(புலோலி)

வல்வெட்டித்துறை கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி துப்பாக்கி, பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்ட கடற்படையினர் மீனவர்களின் இயந்திரப்படகு ஒன்றையும் மீன்பிடிவலைகளையும் இழுத்துச் சென்றுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க

## நில்கிரியில் 1,500 பரல் மண்ணெண்ணை வந்தது

(நெல்லியடி)

"நில்கிரி" கப்பல் 1500 பரல் மண்ணெண்ணையுடன் நேற்றுக்காலை பருத்தித் துறையை வந்தடைந்தது. இந்த மண்ணெண்ணையைச் சல பலநோக்குக் கூட்டுறவுச்

[4-ம் பக்கம் பார்க்க]

## குமணவில் வந்த பொருட்கள்

(நெல்லியடி)

நேற்று பருத்தித்துறை துறைமுகம் வந்து சேர்ந்த குமண கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருட்களின் விபரம் வருமாறு:

அரிசி 2000 மெ. தொன், மா 450 மெ. தொன், சீனி 200 மெ. தொன், பால்மா, 100 மெ. தொன், பயறு 50 மெ. தொன் சோப் 20 மெ.

(4-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் தபால்கள் இன்று முதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குமண கப்பலில் வந்த 220 பொதிகளில் கூடுதலான தபால் பொதிகளும் நேற்று யாழ். தபால் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

இம்முறை வந்த தபால்களில் கூடுதலாக வெளிநாட்டுத்தபால்களும் வந்துள்ளதினால் இன்று முதல்

(4ம் பக்கம் பார்க்க)

## அரச எதிர்ப்பு நடவடிக்கையில் பத்திரிகையாளர் குதிப்பு

(கொழும்பு)

சுதந்திர பத்திரிகையாளர் சங்கம் மேற்கொள்ளத்திட்டமிட்டிருக்கும் சத்தியாக்கிரஹப் போராட்டத்துக்கு பொதுமக்கள் ஆதரவு திரட்டப்படவுள்ளது.

நாளை நண்பகல் 12மணிக்கு கொழும்பு கோட்டையில் இதன் பொருட்டு 'பிக்கற்றிங்' நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கத்தின் மூலம் இந்த பிக்கட்டிங் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது'

எதிர்க் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(இ)

## சுதேசவைத்திய மாணவர்கள் கொழும்பில் சத்தியாக்கிரஹம்

(கொழும்பு)

கொழும்பு சுதேச வைத்திய கல்லூரியின் மாணவர்கள் நேற்றுக்காலை சத்தியாக்கிரஹ போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர்.

சுதேச வைத்தியக் கல்லூரி மாணவர்களின் கல்வி சம்பந்தமாககாணப்படும் குறைபாடுகளை நீக்கக்கோரி இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரையில் இந்த சத்தியாக்கிரஹ போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என சம்பந்தப்பட்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப்போராட்டம் காரணமாக மேற்படி வைத்தியக் கல்லூரிக்கு மாணவர்களை

4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி-7260]

### பயிற்சி

ரெலிவிசன், வீடியோ, டெக் றிப்பியறிங், றீவைண்டிங், ஏயர் கொண்டிசனிங் பயிற்சிகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும். ஆரம்பம்: 15-03-93 Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை யாழ்ப்பாணம்.
(எ-2950)

### கண்டெடுக்கப்பட்டது

சாவகச்சேரி நகரசபையின் நுணுவில் கிளை நூலகப் பொறுப்பாளராகிய திரு. செ. சிவசுதன் அவர்களால் கடந்த 5-3-93 அன்று சாவகச்சேரியில் ஓர் பயணப்பை கண்டெடுக்கப்பட்டு தற்போது சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் கையளித்துள்ளார். அப்பையில் அருளம்பலம் தம்பிராசா - இடைக்காடு எனக் குறிப்பிட்ட அடையாள அட்டையும் பணமும் வேறு பல பொருட்களுமுண்டு இதற்குரியவர் சாவகச்சேரி நகரசபையின் செயலாளரிடம் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளவும். (சி-4008)

### விற்பனைக்கு

அல்சேசன் நாய்க்குட்டி (14 மாதம்) நல்ல இனக்குட்டி ..... "Black & ..." ..னைக்குண்டு எஸ். விமலன், 145/1, பாங்சோல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
(சி 4010)


## இராசி பலன்

10-03-1993

புதன்கிழமை

(தமிழுக்கு மாசி 27)

துதியை மு. ப. 11-24 வரை அத்தம் பி. ப. 5-05 வரை, சித்தயோகம், இராகுகாலம் நண்பகல் 12-24 முதல் 1-54 வரை, சுபநேரம் மாலை 5-11 முதல் 6-24 வரை.

மேடம்- உடன் பிறந்தோர் ஆதரவு, வெற்றி வாய்ப்பு, கலைஞானம்.

இடபம்- பணவசதி முடக்கம், மறைமுக எதிர்ப்பு, மனக்கவலை.

மிதுனம்- உறவினர் விரோதம், ஏமாற்றம், தேக பாதிப்பு.

கடகம்- வாகன அதிஷ்டம், புதிய ஒப்பந்தம், பணவரவு.

சிங்கம்- குடியிருப்பு கஷ்டம், வீண் தகராறு, மனப்பயம்.

கன்னி- பொருளாதார வசதி, புதிய முதலீடு, தீவிர முயற்சி.

துலாம்- பழைய கடன் வசூல், தொழில் லாபம், புதிய சிந்தனை.

விருச்சிகம்- தொழில் பாராட்டு, வசதியான இடமாற்றம், திலாகம்.

தனுசு- உயர்ந்த அந்தஸ்து, புத்தி சாதுரியம், காரிய சித்தி.

மகரம்- தந்தையர் கவலை, முயற்சித்தடை, பணக் கஷ்டம்.

கும்பம்- தொழில் சஞ்சலம், அடம் பிடித்தல், சுடும்பினம்.

மீனம்- மனோவலிமை, குற்ற உணர்வு, சுபகாரியம்.

ஜோதிடர்

# இன்று கைதடி சிறுவர் இல்ல கொடி தினம்

(யாழ்ப்பாணம்)

இந்துசமயப்பேரவைகைதடி சைவச்சிறுவர் இல்ல கொடி தினம் இன்று புதன்கிழமை 10ம் திகதி யாழ். மாவட்டம் முழுவதிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொடிவிற்பனை வைபவரீதியாக கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நடைபெறும் கொடிவிற்பனையை பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

சகல திணைக்களங்களிலும் பாடசாலைகள், வங்கிகள், பொது இடங்கள் அனைத்திலும் கொடிகள் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக் கொடிதினம்மூலம் சேகரிக்கப்படும் பணம் போரின் கொடுமையால் தாய், தந்தையரை இழந்த அல்லது அநாதரவாக்கப்பட்ட குழந்தைகள் பராமரிப்புக்காக பயன்படுத்தப்படும் என்று பேரவை செயலாளர் தெரிவித்தார். -154

## தொடர்புகொள்ள கோரிக்கை

(கொழும்புத்துறை)

கடந்த மாதம் 27ம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற பொது எழுதுநர் சேவையின் அதி உயர் தரத்துக்கான சேவை மூப்பு அடிப்படையில் தெரிவு செய்வதற்குரியபோட்டிப்பரீட்சைக்கு போக்குவரத்துக்கஷ்டம் காரணமாக தோற்றுதவர்களை பொது நிர்வாக அமைச்சருக்கு முறையீடு செய்வதற்காக திரு. கா. பீதாம்பரம் நிர்வாக உத்தியோகத்தர், செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது கடிதமூலமோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டப்படுகிறீர்கள். (154-இ)

## புதிய அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதி ராக திரு துரைச்சாமி சந்தோஷம் பதவி உயர்வு பெற்றுள்ளார். இவர் இக்கல்லூரியின் பழைய மாணவராவார். ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் சேவையாற்றிய இவர் முதலாந்தர அதிபர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ம. எண்ணெ விநியோகம்

மானிப்பாய்)

மானிப்பாய் ப. நோ. கூ. சங்க கிளைகளில் குடும்ப மொன்றிற்கு 1 லீற்றர் மண்ணெண்ணெ 15 ரூபா வீதம் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. (71-சி)


## வாழ்த்துகிறோம்

யாழ். தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

நடாத்தும் பரிசளிப்புவிழா (1992)
சிறப்புற நிகழ மனதார
வாழ்த்துகிறோம்.

கே. கே. இராசரத்தினம் நகைமாளிகை
277, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ 4007)



தமிழர் வாழ்வு சுபீட்சம் பெற
இறையருள் வேண்டி

## விடிவிளக்குகள் — 108

சுழிபுரம் — பறுளை

### ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில்

எதிர் வரும் வியாழக்கிழமையன்று (11 - 3 - 1993)
பிற்பகல் 4-00 மணியளவில் எம்பெருமானுக்கு
விசேட அபிஷேக ஆராதனைகள்
நடைபெறும்.

பிற்பகல் 5-00 மணியளவில்
விநாயகப்பெருமான் எழுந்தருளி
அடியவர்களுக்குக் காட்சி தருவார்.

பிற்பகல் 6-30 மணியளவில்
தமிழ் மக்கள் தங்கள் இன்னல்களிலிருந்து
விடுபட வேண்டி
வேண்டுபவர் வேண்ட முன் கொடுக்கும்
பறுளை ஈசுர விநாயகப் பெருமானின் அருள் வேண்டியும்,
நாட்டில் அமைதி, சமாதானம் ஏற்படவும் அவரது

108 திருநாமங்களுக்கும்
108 விடிவிளக்குகள்
ஏற்றி வைக்கப்படும்.

இத்தினத்தில் அடியார்கள் வருகை தந்து பிரார்த்தனை செய்யும்வண்ணம் தேவஸ்தானம் கேட்டுக்கொள்ளுகின்றது.

சோழியூரான்,
பிறைகுடிக்குரு.
(சந்ததிப் பூசகரும் ஓய்வுபெற்ற ஆசிரியரும்)

(இ-7299)


# கிராம அபிவிருத்தி திட்டம் அரசு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

கிராமமட்டத்தில் பொது மக்கள் இணைந்து மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரசாங்கத்தினால் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இத்திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் பற்றிய மேலதிக விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.
(159-சி)

# 900 அடையாள அட்டைகள் யாழ். வருகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்துக்குரிய தொள்ளாயிரம் தேசிய அடையாள அட்டைகள் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் முதன் முறையாக விண்ணப்பிக்கப்பட்டவர்களுக்கான 233 அட்டைகளும், பாடசாலை மாணவர்களுக்கான 74 அட்டைகளும், 1972, 73 ம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளுக்கு மாற்றீடாக வழங்கப்பட்ட 144 அடையாள அட்டைகளும், தொலைந்துபோனமைக்காகவும் திருத்தங்கள் செய்வதற்குமாக அனுப்பப்பட்ட 440 அடையாள அட்டைகளும் அடங்கும்.

இவ்வடையாள அட்டைகள் பாடசாலை அதிபர், கிராமசேவை உத்தியோகத்தர் தபால் திணைக்களம் மூலம் இவை உரியவர்களுக்கும் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது
(161-159-சி)

## அடையாள அட்டைகளை பெறுமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் மாதம் ஆட்பதிவுத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்ட பாடசாலைகளுக்குரிய அடையாள அட்டைகளைக் கீழ்க் குறிப்பிடப்படும் இப் பாடசாலை அதிபர்கள் இன்னமும் வந்துபெற்றுக்கொள்ளவில்லை.

இவ் அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லுமாறு கடித மூலம் கோரியும் இவ் அட்டைகளை எடுத்துச்சென்று தத்தமது பாடசாலை மாணவர்களுக்கு விநியோகம் செய்வதில்லை ..... .....

அரியாலை ஸ்ரீபார்பதி வித்தியாசாலை, அராலி இந்துக் கல்லூரி இடைக்காடு மகாவித்தியாலயம் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயம், வரணி - இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலயம், நாவாந்துறை றோ. க. த. கலவன் பாடசாலை, மண்டைதீவு மத்திய வித்தியாலயம ஆகிய 11 பாடசாலைகளுக்குரிய 60க்கும் அதிகமான அடையாள அட்டைகள் இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. -161-சி

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வீ. கணேசராஜா தலைமையில் நடைபெறும் மேற்படி போட்டியில் யாழ். கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பொறுப்பாளர் வ. இளங்குமரன் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி. சிவானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (சு)

## அன்னைபூபதி பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தற்கொடையாளி அன்னை பூபதிநினைவு பொது அறிவுத் தேர்வு திட்டமிடப்பட்டபடி இம் மாதம் 30ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற விருப்பதால் மேற்படி போட்டிக்குரிய விண்ணப்பங்கள் அனைத்தையும் பாடசாலை அதிபர்கள் அவ்வக்கோட்டங்களுக்கு இன்று புதன்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுவதால் இதுவரை விண்ணப்பபடிவங்களைப் பெறாத பாடசாலை அதிபர்கள் தமக்குரிய கோட்டங்களுடன் தொடர்பு கொண்டு உடன்பெற்று வழங்குமாறு வேண்டப்படுகின்றனர். -சி

## சுகாதார வசதி

(உடுவில்)

இணுவில் ஆச்சிரம வீதியில் பூவோடை மயானத்துக்கருகில் அமைந்திருக்கும் எழுபத்தைந்து பேர் கொண்ட ஒன்பது குடும்பங்களுக்கு சன சமூக நிலையங்களின் சமாசத்தினர், சர்வோதய அமைப்பின் ஆதரவில் மலசலகூட சுகாதார வசதிகளை செய்து கொடுத்துள்ளனர்.

இடம்பெயர்ந்துவந்து தங்கியுள்ள இக்குடும்பங்கள் சுகாதார வசதியற்ற நிலையில் வாழ்ந்து வந்தது குறிப்பிடத்தக்கது. (109)

## புதிய சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசு, தனியார் வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் நலன்காக்கும் சங்கம் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. சங்கத்தலைவராக எஸ். ஆர். முத்தையாவும் உபதலைவராக கே. நடராசாவும் செயலாளராக ஜெ. சந்திரகாந்தனும், பொருளாளராக பி. அஞ்சலோவும் தெரிவுசெய்யப்பட்டனர். (சு)

## நூல் நிலைய திறப்பு விழா

(பருத்தித்துறை)

புலோலி கிராமக் கோட்டுச் சந்திக்கு அண்மையில்புலோலி பொதுமக்கள் இலவச நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நூல் நிலையத் திறப்புவிழா திரு. எஸ் சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இளைப்பாறிய விவசாயத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. பொன். மாணிக்கவாசகர் சம்பிரதாய பூர்வமாக குத்துவிளக்கேற்றி நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார். (52)

# ஈழப் போருக்கு ஆதரவு; பி.பி.ஸி.மீதுபலத்தகண்டனம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் பி. பி. ஸி.க்கு அண்மையில் வழங்கிய பேட்டிக்கு பி. பி. ஸி. முக்கியத்துவம் கொடுத்து ஒலிபரப்பியமை குறித்து கொழும்பில் பலர் தமது அதிருப்தியை வெளியிட்டனராம்.

மேலும் பிரிவினைகோரிப் போராடிவரும் இலங்கை தமிழர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்வகையில் பி.ஸி. செய்திகளை ஒலிபரப்பி வருவதாகவும், இலங்கையின் இனப்பிரச்சினை குறித்த விவகாரத்திற்கு பி பி. ஸி. முக்கியத்துவம் அளிப்பதாகவும் அவர்கள் குறைபட்டுக்கொண்டனராம்.

4பேர் கொண்ட பி. பி. ஸி. செய்தியாளர் குழுவுடன் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பி. பி. ஸி. பிரிட்டிஷ் அரசின் கட்டுப்பாடின்றி சுயாதீனமாக இயங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. க-சி

# பஸ்ஸை மறித்து தீ வைப்பு பதினாறு பயணிகள் கருகிப் பலியாகினர்

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேசத்தில் காபூர் கிராமத்தில் நேற்று முன்தினம் காலை 16பேர் உயிருடன் தீவைத்து கொளுத்தப்பட்டனர்.

ஹைதராபாத்திலிருந்து சென்றுகொண்டிருந்த அரசபோக்குவரத்து பஸ்ஸை விசமிகள் மறித்து பஸ்ஸுக்கு தீயிட்டுக் கொளுத்தினர்.

இச்சம்பவத்தில் 16 பேர் உடல்கருகிப் பலியானதோடு மேலும் 10பேர் படுகாயமுற்றனர்.

மேற்படி பஸ்ஸில் பயணம் செய்த இரு விஷமிகள், பஸ்ஸை ஒரு காட்டுப்பகுதியில் நிறுத்தி, பயணிகளை வெளியேறமுடியாதபடி பஸ்ஸின் கதவுகளை அடைத்துவிட்டு, பஸ்ஸுக்கு தீமூட்டிவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாக பொலிசார் தெரிவித்தனர். (வி-கே-சி)

# கொதி சீனிப்பாணி சரிந்து இளைஞர் படுகாயம்

(ஆனைப்பந்தி)

நாவற்குழி பகுதியில் உள்ள இனிப்பு பண்டங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் அடுப்பில் கொதித்துக்கொண்டிருந்த சீனிப்பாணி சரிந்து ஊற்றப்பட்டதனால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மேற்படி தொழிற்சாலையின் உரிமையாளரான சிவகுமார் என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

கை கால்கள் இடுப்பு பகுதிகளில் கடும் எரிகாயங்களுக்கு உள்ளான இவரும் சிறுகாயத்திற்குள்ளான தொழிலாளியான சின்னத்தம்பி என்பவரும் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். (101-சி)

# நெரிசலில் 18 பேர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் இமாசலப்பிரதேசத்திலுள்ள மைனி என்ற இடத்தில் நடைபெற்ற சமயகொண்டாட்டங்களில் கலந்துகொண்ட பல லட்சக்கணக்கான மக்களின் நெரிசலில் அகப்பட்டு 18 பேர் உயிரிழந்துள்ளனர். (வி-சி)

# புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் புதிய இயந்திர சாதனம்

(கொழும்பு)

ஆரம்பத்திலேயே புற்றுநோயை கண்டுபிடிக்கக்கூடிய இயந்திர சாதனம் ஒன்று முதற்தடவையாக மஹரகமவில் புற்றுநோய் வைத்தியசாலையில் பொருத்தப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி 50 லட்சம் ரூபாவாகும்.

6 மாதத்திற்கு ஒருதடவை இந்த இயந்திரத்தின் மூலம் புற்றுநோய்கள் ஏற்பட்டுள்ளதா என்பதை இலவசமாக பரிசோதித்துக் கொள்ள மக்களுக்கு வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ளது. -கே-இ

## ஜனாதிபதியைச் சந்திக்க

# ஜே. வி. பி. தலைவர் விருப்பம் தெரிவிப்பு

(லண்டன்)

ஜே வி. பி.யின் தற்போதைய தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

தற்போது லண்டனில் தங்கியுள்ள இவர், விஜராத்தெனியவில் உள்ள தமது நண்பருக்கு எழுதியுள்ள கடிதத்தில் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவைச் சந்தித்து, அவர் மூலமாக ஜனாதிபதியைச் சந்திக்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இலங்கையில் இருந்து தப்பிச் சென்ற சோமவன்ஸ அமரசிங்க, பல மாதங்களாகத் தென்னிந்தியாவில் தலைமறைவாக இருந்த பின் தற்போது லண்டன் சென்றுள்ளார். (வி-இ)

# இன்று

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் திருவள்ளுவர் மன்றம் நடாத்தும் 'திங்கள் ஒரு உரையரங்கும், கலந்துரையாடலும்' என்னும் நிகழ்ச்சியின் இம்மாத அரங்கு இன்று மாலை 4 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

"வள்ளுவம் காட்டும் கல்வி நெறி'' என்னும் பொருளில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திரு. தி. கமலநாதன் உரையாற்றவுள்ளார்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி க. சி. த. க. பாடசாலை இல்லவிளையாட்டுப்போட்டிகள் அதிபர் சீ. குணலிங்கம் தலைமையில் இன்று 10ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நீர்வேலி கொத்தணி அதிபர் திரு. வி. கணேசராசா கலந்து கொள்வார்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கணிதவிஞ்ஞான முலவள நிலைய ஓராண்டு நிறைவுவிழா கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இன்று 10ம் திகதி முதல் 3 தினங்கள் காலை 9 மணிவரை நடை நடைபெறும்.

நான்காம் நாள் 13ம் திகதி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் காலை 9மணிக்கு உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தலைமையில் நடைபெறும். நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினராக தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனும் கலந்து கொள்வார்கள்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்-நாவலர் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று 10ம் திகதி பி.ப. 1-30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

தீவகப் பிரதேச செயலகங்கள் ஒன்றிணைந்து நடாத்தும் கழகங்களுக்கிடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டி தொடரியான கலந்துரையாடல் இன்று 10ம் தேதி காலை 10மணியளவில் வேலணைப் பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

# 27 ஆசிரியர்கள் அதிபர்களாக பதவி உயர்வு

(திருநெல்வேலி)

அதிபர் தரம் III பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைகளில் தற்போது ஆசிரியர்களாக கடமையாற்றும் 27 பேர் விரைவில் பாடசாலைகளில் உபஅதிபர், பகுதி தலைவர்களாக நியமிக்கப்பட உள்ளனர்.

யாழ். கல்விக்கோட்டம் இவர்களுக்கான பாடசாலைகளை நியமித்துவருகிறது. வெகுவிரைவில் இவர்கள் வேறு பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட உள்ளனர்.

பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்கள் அடிப்படையிலே இவர்களுக்குரிய சம்பளங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. -157-இ

## இன்று

# இலங்கை — இங்கிலாந்து 1வது ஒருநாள் போட்டி

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டிகள் இன்று முதல் ஆரம்பமாகின்றன.

முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி இன்று ஹேத்தாராம விளையாட்டரங்கில் பகல் இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி 13-ம் திகதி ஹேத்தாராமா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தியாவில் கிரிக்கெட் சுற்றுலாவை முடித்துக் கொண்டு இலங்கை வந்துள்ள இங்கிலாந்துக் கோஷ்டிக்கு அலெக்ஸ் ஸ்ருவேட் இலங்கை கோஷ்டிக்கு அருச்சுன ரணதுங்காவும் தலைமை தாங்குகின்றார்கள். (வி-இ)

## கிரிக்கெட்

# சென். ஜோன்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில், சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 62 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 59 ஓட்டங்களையும் எடுத்தது. சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 82 ஓட்டங்களையும் 2வது இன்னிங்ஸில் 2விக்கெட்டுகள் இழப்புக்கு 40 ஓட்டங்களையும் எடுத்தது.

சென் ஜோன்ஸ்கல்லூரியின் பந்து வீச்சுவீரர் எம். காண்டீபன், இரு இனிங்ஸிலும் மொத்தம் 13 விக்கெட்டுகளை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது. -வி

# தொழுநோயால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தொழுநோயால் பீடிக்கப்பட்டு ஒரு குடும்பத்தைப் சேர்ந்த மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இவர்கள் வசாவிளானிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது சரசாலை வடக்கில் வசிப்பவர்களாவர். (56-இ)

# முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

மகளிர் தினத்தையொட்டி யாழ். கல்வித் திணைக்கள மனைப் பொருளியல் பிரிவும் மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடாத்திய உள்ளூர் வளங்களிலிருந்து உணவு தயாரித்தல் கண்காட்சியில் கலாலயா முதலாவது இடத்தைப் பெற்றது.

பாடசாலை மட்டத்தில் கண்டுக்குளி மகளிர் கல்லூரியும் தனிநபர் பிரிவில் திருமதி மரியநாயகமும் முதலாவது இடத்தைப் பெற்றனர்.

## ★ யாழ். மாவட்டத்தில்

# 16,974 குழந்தைகள் கடந்த வருடம் பிறந்தன

(யாழ்ப்பாணம்)

1992ம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் பிறந்த குழந்தைகள் எண்ணிக்கை 16 974 என சுகாதாரப் பகுதியினரால் கணக்கிடப்பட்டுள்ளது.

இதன்படி தெல்லிப்பளைப் பகுதியிலேயே கூடுதலான குழந்தைகள் பிறந்துள்ளனர். தெல்லிப்பளையில் 2,898 குழந்தைகளும் கோப்பாய்ப்பகுதியில் 2,690 குழந்தைகளும் யாழ். மாநகர சபைப்பகுதியில் 2,707 குழந்தைகளும் பருத்தித்துறைப் பகுதியில் 2,484 குழந்தைகளும், மானிப்பாய்ப்பகுதியில் 2,402 குழந்தைகளும், ஊர்காவற்றுறைப் பகுதியில் 1,887 குழந்தைகளும் பிறந்திருக்கின்றன.

பிறந்த குழந்தைகளில் நிறை குறைந்தும் பிறந்த உடன் இறந்தும் உள்ள குழந்தைகள் தொகை கடந்த வருடத்தில் 1,306 ஆகும். (56-இ)

## தவக்கால நற்சிந்தனை

''நானே உலகின் ஒளி, என்னைப் பின் செல்பவன் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்.'' (அரு 8: 12ஆ)

யேசு இந்த உலகிற்கு ஒளியாக வந்தார். இருள் சூழ்ந்த உலகிற்கு அவரே ஒளி. அந்த ஒளியிலே நாம் நடக்க வேண்டும். அந்த ஒளி எம் வாழ்வில் ஒளிர வேண்டும். அந்த ஒளியை நாம் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் இருள் சூழ்ந்த எம் வாழ்வு ஒளிரும்.

மோ. தா.

## யாழ். - வன்னி தந்திசேவை

# விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்: வன்னி தந்திச்சேவையொன்றினை விரைவில் ஆரம்பிக்க போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் எண்ணியுள்ளனர். தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு பொதுமக்களுக்கான தந்திச் சேவையொன்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இச் சேவை யாழ்- வன்னி தொடர்புக்கு மட்டுமே செயற்படுவதாக அமையும். இவ்வாறான சேவையின் தேவை பற்றிய அபிப்பிராயங்களையும், எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றிய ஆலோசனைகளையும், மக்கள் மத்தியிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

உங்கள் அபிப்பிராயங்களையும் எழுதி நேரிலோ அல்லது தபாலிலோ 'ஈழநாடு' பணிமனைக்கு அல்லது போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவின் அபிப்பிராயப் பெட்டிகள் மூலமோ கூடிய விரைவில் கிடைக்கச்செய்யுமபடி கேட்டுள்ளனர். (வி-சி)

